# A.D.M. COLLEGE FOR WOMEN

(Autonomous)

*Affiliated to Bharathidasan University*

(Nationally Accredited with "A" Grade by NAAC – 3rd Cycle)

**NAGAPATTINAM 611 001.**

## 6.3.1 COMPASSIONATE GROUND FOR THE WORKERS

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: முனைவர். தி. அறிவுடை நம்பி எம்.எஸ்ஸி.,பி.எட்., எம்.பில்.,பிஜிடிசிஏ., பிஎச்.டி.,

நி.மு.எண்: 578 /ஆ1 /2020 நாள்: .08.2021

1.10.21

பொருள் : உதவிபெறும் கல்லூரி – ஏ.டி.எம் மகளிர் கல்லூரி நாகப்பட்டினம் மான்யத்திற்கு அனுமதிக்கப்பட்ட காலியாக உள்ள ஆசிரியரல்லாப் பணியிடத்தில் கருணை அடிப்படையில் திரு.மு.பிரபாகரன் என்பவரை பதிவறை எழுத்தர் பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டமை ஒப்புதல் அளித்து ஆணையிடல் தொடர்பாக.

பார்வை : 1) சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:24398/ஜி3/2018–23 நாள் 13.12.2018

2) சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ப.மு.எண் 19655/எப்3/2019 நாள் 31.12.2019

3) கல்லூரி செயலரின் கடிதம் எண் ந.க.எண் 1017 ( RC) /அ / 2020 நாள் 18.02.2020

4) அரசாணை எண் 303/நிதி (சம்பளப்பிரிவு) துறை நாள் 11.10.2017

*****

பார்வை (1) இல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநரால் அனுமதிக்கப்பட்ட நிரந்தரப்பணியிடங்களில், பார்வை (4) இல் காணும் அரசாணையின்படி புதிய ஊதிய விகிதத்தில் Level 2-ன்படி (15900–50400)–இல் ஊதியத்தினை நிர்ணயம் செய்யவும், ஆசிரியரல்லாப் பணியிடத்தில் கீழ்கண்ட பணியாளரை பதிவறை எழுத்தர் பணியிடத்தில் பணிநியமனம் பெற்றமைக்கு மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | எந்த தேதி முதல் அரசு மான்யத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது | பணியின் தன்மை மற்றும் யாருடைய காலிப்பணியிடத்தில் நிரப்பப்படுகிறது | வகுப்பு சுழற்சி முறை எண் / ~~வேலை வாய்ப்பக பதிவெண்~~ |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1) | திரு.மு.பிரபாகரன் பதிவறை எழுத்தர் | 30.01.2020 முற்பகல் முதல் | /நிரந்தரம்/ திரு.எஸ்.அய்யாதுரை,பதிவறை எழுத்தர் 29.02.2016 அன்று ஓய்வில் சென்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடம் | கருணை அடிப்படைக்கு பொருந்தாது |

***நிபந்தனைகள்:***

1. மேற்கண்ட பணியிடங்கள் யாவும் அலகிற்கும் / மான்யத்திற்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அலகிற்கு மேல் இருக்கக்கூடாது.
2. சார்ந்த பணியாளரின் நியமனம் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் தணிக்கையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.
3. மேற்காண் நியமனம் தொடர்பாக எவரேனும் நீதிமன்றத்திற்கு செல்வாரேயாயின் விளைவுகளுக்கு கல்லூரி நிர்வாகமே முழு பொறுப்பேற்க வேண்டும்.
4. மேற்கண்ட நியமனங்கள் கல்லூரி செயலரின் விளக்கத்தின் அடிப்படையிலும் ஒட்டு மொத்த இனவாரி சுழற்சி சரியாக கடைபிடிக்கப்பட்டுள்ளதாலும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
5. இது தொடர்பாக தணிக்கைத் தடை ஏற்படின் கல்லூரி நிர்வாகமே தொடர்புடைய விளைவுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.
6. செயலரின் கடிதத்தோடு பெறப்பட்ட சார்ந்த பணியாளரின் அசல் சான்றிதழ்கள் இத்துடன் இணைத்து மீள அனுப்பப்படுகிறது. இச்செயல்முறை மற்றும் அசல் சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டமைக்கு பெறல் ஏற்பினை உடன் அனுப்ப வேண்டும்.

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
தஞ்சாவூர் மண்டலம்
தஞ்சாவூர் 613 007

<u>இணைப்பு:</u> கருத்துருவுடன் பெறப்பட்ட சான்றுகள் (நகல்கள்)

<u>பெறுநர்</u>
செயலாளர்,
ஏ.டி.எம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), நாகப்பட்டினம்.

நகல்: தணிக்கை பிரிவிற்கு

A.D.M. COLLEGE FOR WOMEN
PRINCIPAL
NAGAPATTINAM